

விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் விழுப்புரம் மத்திய மாவட்டம், விழுப்புரம் சட்டமன்ற தொகுதி, விழுப்புரம் நகரம் 36 வது வார்டு ஆசாக்குளம் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்த மழைநீர் வடிகால் பைப்லைனை தனது சொந்த செலவில் அமைத்து தருவதாக வாக்குறுதி அளித்தார். அதனை தொடர்ந்து தற்போது நடைபெற்று வரும் அப்பணியினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் கழக நிர்வாகிகள் இருந்தனர். அப்பகுதி மக்கள் சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து தங்களது நன்றிகளை தெரிவித்துக் கொண்டனர்.

சிவகங்கை மாவட்டம் – காரைக்குடியில்

புனரமைக்கப்பட்ட பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் சிலை!

முன்னாள் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் திறந்து வைத்தார்!

சிவகங்கை . நவ.3- சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் 2007 ஆம் ஆண்டு எஸ் .ஆர். தேவர் முயற்சியால் நகராட்சி அலுவலகம் அருகில் 100அடி சாலையில் பசும் பொன் முத்துராம லிங்கத் தேவரின் முழு உருவ வெண்கல சிலை பீடத்து டன் அமைக்கப்பட்டது. 2007 இல் அமைக்கப்பட்ட பசும்பொன் முத்துராம லிங்கத் தேவர் சிலையை அப்போதைய துணை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்து சிறப்புரையாற்றி னார் .19 ஆண்டுகளுக்கு பின் அந்த சிலை புனரமைக்கப்பட்டு நேற்று முன்தினம் முன் னாள் அமைச்சர் சிவ கங்கை மாவட்ட கழகச் செயலாளர் கே.ஆர்.பெரி யகருப்பன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்ச்சிக்கு எஸ் .ஆர் . தேவர் தலைமை தாங்கி னார். நிகழ்ச்சிக்கு முன் னாள் அமைச்சர் மு.தென் னவன் மூ வேந்தர் முன்னேற்ற பேரவை மாநில இளைஞரணி செய லாளர் பி செந்தில்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

நிகழ்ச்சியில் தென்னிந் திய பார்வர்ட்பிளாக் தலை வர் திருமாறன்ஜி, மதுரை நான்காம் தமிழ்ச் சங்க தலைவர்இருமதி துரை. கருணாநிதி, மாவட்ட கழக துணை செயலாளர்த. சேங்கைமாறன், முன்னாள் ஒன்றிய குழு தலைவர் நல்ல சேதுபதி காரைக்குடி மாநகர செயலாளர் மேயர் நா.குணசேகரன் முன் னாள் எம்.எல்.ஏ. எஸ். மாங்குடி, இந்திய கம்யூ னிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் பி. எல். ராமச்சந் திரன் இந்து முன்னணி மாவட்ட தலைவர் அக்னி பாலா, காரைக்குடி மாநகர தேவர் பேரவை வி.கே. ராமசாமி , துரை. காளி முத்து காரைக்குடி மறவர் சங்க தலைவர் செந்தில் நாதன் ஆகியோர் வாழ்த் துரை வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில் தேவ கோட்டை நகர் கழக செய லாளர் பெரி. பாலா ஒன் றிய செயலாளர்கள் சுப. சின்னத்துரை, நாகனிரவி, லெ. மு.,ரவிச்சந்திரன், ஒன் றிய துணை செயலாளர் எஸ். முத்துக்குமார், புதுவ யல் பேரூர் கழக செயலா ளர் பக்ருதீன் அலி அகமது, காரைக்குடி மாநகர, ஒன் றிய கழக நிர்வாகிகள், துணை செயலாளர் சொ.கண்ணன், வக்கீல் பாலசுப்பிரமணியன் , மாவட்ட பிரதிநிதி ஒட்டு னர் ரமேஷ், கா.சுப்பையா, மெ.பழனியப்பன், வர்த் தக அணி ருக்மா சரவணன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி. ராஜ்கு மார், துணை அமைப்பா ளர் ஜெபதுரை ,திருமதி சத்யா,லட்சுமி கணேஷ் ,வட்டச் செயலாளர் பாண்டி, ராம.அன்பழகன், போஸ், குணசேகரன், நகர் இளைஞரணி அமைப்பா ளர்கள் தினகரன், கார்த் திக், மதன்ராஜ், துணை அமைப்பாளர்கள் மலர் விழி பழனியப்பன், பாண்டி , மெ.கார்த்திகே யன், விஜயகுமார், தா. ராஜா குரு. பாலு முகமது சித்திக் திருஞானம், அன்பு தென்னவன், முன்னாள் கவுன்சிலர் ரவி மற்றும் நிர் வாகிகள் கலந்து கொண் டார்கள். முன்னதாக டி. முருகேசன் வரவேற்புப் பேசினார்.

ஆப்பனூர் கணேசன் நன்றி கூறினார். விழா விற்கான ஏற்பாடுகளை எஸ். ஆர் .தேவர் தலைமை யில் விழா குழுவினர் செய் திருந்தார்கள்.



பசும்பொன் உ.முத்துராமலிங்கத் தேவர் திருமகனாரின் 119வது ஜெயந்தி விழாவை முன்னிட்டு, எட்டையாபுரம் தெற்கு தெரு,மேலத்தெரு, வடக்குத்தெருவில் உள்ள திருவுருவச் சிலைக்கும் படத்திற்கும், கோவில்பட்டி கிழக்கு ஒன்றியம் இளம்புவனத்தில் அமைந்துள்ள அன்னாரது திருஉருவசிலைக்கும் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ.வி.மார்க்கண்டேயன் மலர் தூவி மரியாதை செலுத்தி அன்னதானத்தை துவக்கி வைத்தார்.உடன் ஒன்றிய செயலாளர்கள் நவநீதக்கண்ணன், சின்னமாரிமுத்து, ராமசுப்பு, அன்புராஜன், இமானுவேல், எட்டையாபுரம் பேரூராட்சி மன்ற தலைவர் ராமலட்சுமி சங்கரநாராயணன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள்,பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

நெல்லை மேற்கு மாவட்டம்

அம்பை சட்டமன்றத் தொகுதியில் 3 நாட்கள் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

கழக நிர்வாகிகளுக்கு நெல்லை மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் அறிவிப்பு!

நெல்லை.நவ.3- நெல்லை மேற்கு மாவட் டம் அம்பாசமுத்திரம் சட் டமன்ற தொகுதியில் நடை பெ ற யி ரு க் கு ம் இடைத்தேர்தல் சம்பந்த மாக பொது உறுப்பினர் கள் கூட்டம் அம்பை தொகுதிக்கு உட்பட்ட ஒன்றிய,நகர,பேரூர் பகுதி களில் பொது உறுப்பினர் கள் கூட்டம் 03-11-2026 முதல் 05-11-2026 வரை 3 நாட்கள் நடைபெறுகிறது. இதில் கழக நிர்வாகிகள் கலந்து கொள்ள வேண் டும்.என நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா. ஆவுடையப்பன்



அறிக்கையில் தெரிவித் துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியிருப்பதாவது.

கழகத் தலைவர் அன்புத் தளபதியார் அவர்கள் ஆணைக்கிணங்க

அம்பாசமுத்திரம் சட்ட மன்ற தொகுதி இடைத் தேர்தல் சம்பந்தமாக ஒன் றியம், நகரம்,பேரூர் கழ கம் வாரியாக பொது உறுப் பினர்கள் கூட்டங்கள் கீழ்க்கண்டவாறு நடை பெறுகிறது.

அதன்படி முதற்கட்ட பட்டியல் விவரம் வரு மாறு.

03-11-2026 செவ்வாய்க் கிழமை

மாலை 4 மணி சேரன்ம காதேவி கிழக்கு ஒன்றியம் மற்றும் சேரன்மகாதேவி பேரூர். மாலை 6 மணி-வீர வநல்லூர் பேரூர். மாலை 7 மணி கல்லிடைக்குறிச்சி-பேரூர்.

04-11-2026 புதன்கிழமை காலை 11 மணி

அம்பாசமுத்திரம் கிழக்கு ஒன்றியம் - மாலை 6 மணி அம்பாசமுத்திரம் மேற்கு ஒன்றியம்.

05-11-2026 வியாழக்கிழமை

காலை 11 மணி சேரன் மகாதேவி மேற்கு ஒன்றியம்.

மாலை 5 மணி மேலச் செவல் பேரூர் மாலை 6.30 மணி-அம்பாசமுத்திரம் நக ரம். ஆகிய நான்கு நாட்கள் நடைபெறுகிறது.

இவ்வாறு அவர் கூறி யுள்ளார்.

பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி

மதுரை இரயில்வே கோட்ட மேலாளரிடம் மனு!

கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் தி.மு.இராசேந்திரன் நேரில் வழங்கினார்!

தென்காசி.நவ.3.

மதுரை இரயில்வே கோட்ட மேலாளரை நேரில் சந்தித்து தென் காசி மாவட்டம் கடையநல்லூர் சட்ட மன்ற உறுப்பினர் தி.மு.இராசேந்தி ரன் கிராம மக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு கோரிக்கை களை வலியுறுத்தி நேரில் மனு கொடுத்துள்ளார்.

அந்தக் கோரிக்கை மனுவில் அவர் கூறி இருப்பதாவது.

வண்டி எண் 16101/16102 தாம் பரம் – கொல்லம் தாம்பரம் விரைவு இரயிலை பகவதிபுரம் இரயில் நிலையத்தில் நின்று செல்ல நடவ டிக்கை எடுக்க வேண்டும். கடைய நல்லூர் தென்காசி இரயில் நிலை யங்களுக்கிடையே மீட்டர் கேஜ் காலம் தொட்டு இயங்கிவந்த நயி னாரகரம் இரயில் நிலையத்தை மீண்டும் புனரமைத்து அதனைச் சுற்றியுள்ள கிராம மக்கள் பயன்பெ றும் வகையில் மீண்டும் செயல்பட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திருநெல்வேலியிலிருந்து தென்காசி, கடையநல்லூர், இராஜ பாளையம் மதுரை, கரூர், சேலம் வழியாக பெங்களூருக்கு தினசரி இரயில் சேவையை துவங்க வேண் டும். வாரம் ஒருமுறை செல்லும் திரு நெல்வேலி – மேட்டுப்பாளையம் (வழி–கடையநல்லூர்) வாராந்திர இரயில் சேவையை தினசரி இர யில் சேவையாக மாற்ற வேண்டும். மீட்டர்கேஜ் காலத்தில் தென்காசி – செங்கோட்டை பகவதிபுரம் வழி யாக இயங்கிய நெல்லை கொல் லம் பகல் நேர பயணிகள் இரயிலை மீண்டும் இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வண்டி எண் 20681/20682 சிலம்பு எக்ஸ்பிரஸ் மற்றும் வண்டி எண் 20683/20684 தாம்பரம் செங்கோட்டை எக்ஸ்பிரஸ் ஆகிய இரயில்களை வாரத்திற்கு மூன்று நாட்கள் இயக்கப்படுவதை தினசரி இரயில்களாக மாற்றி இயக்க வேண் டும் . வண் டி எண் 16721/16722 கோயம்புத்தூர் மதுரை இடையே இயக்கப்படும் இண்டர்சிட்டி எக்ஸ்பிரஸை இராஜ பாளையம், கடையநல்லூர், தென் காசி வழியாக செங்கோட்டை வரை நீட்டிப்பு செய்ய வேண்டும்.பயணி கள் வசதிக்காகவும், கூடுதல் இர யில்களை இயக்க வசதியாகவும் செ ங் கோ ட் டை இ ர யி ல் நிலையத்தில் ஐந்தாவது பிளாட் பாரம் அமைக்கும் பணியை விரை வில் தொடங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். பயணிகளின் வசதிக்கா கவும், இரயில் பெட்டிகளை திறம் பட கையாளவும் செங்கோட்டை இர யில் நிலையத்தில் உள்ள 5 மற்றும் 6வது இரயில்வே வழித்தடத்தை மேற்குப் பகுதியுடன் இணைக்க வேண்டும்.இரயில்களை விரை வாக இயக்கவும், பொதுமக்களில் பயண நேரத்தை மிச்சப்படுத்த வும், தென்காசி – செங்கோட்டை இடையே உள்ள 8 கிலோ மீட்டர் இர யில் வழித்தடத்தை இரட்டை இர யில் வழிப்பாதையாக மாற்ற நடவ டிக்கை எடுக்க வேண்டும்.

செங்கோட்டை இரயில் நிலை யத்தில் 4 மற்றும் 5 வது பிளாட் பாரத்தில் இறங்கும் முதியவர்கள், குழந்தைகள்,கர்ப்பிணி பெண்கள் வசதிக்காக தானியங்கி வசதி (லிப்ட்) ஏற்படுத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும். செங்கோட்டை மற்றும் கடையநல்லூர் இரயில் நிலையங்களை அம்ரித் பாரத் திட் டத்தின்கீழ் உட்கட்டமைப்பை நவீ னப்படுத்தி பயணிகளின் நலனை பாதுகாக்கவும், பயணிகளுக்கு சிறந்த சேவையை வழங்கவும் நட வடிக்கை எடுக்க வேண்டும்.

கடையநல்லூர் மற்றும் செங் கோட்டையில் இரயில் நிலை யங்க ளில் கோச் விபரத்தினை டிஜிட்டல் ஒளி முறையில் பயணிகளுக்கு கோச் எண்கள் தெளிவாக தெரியு மாறு அமைத்திடல் வேண்டும்.என தெரிவித்துள்ளார். மனுவை பெற் றுக் கொண்ட இரயில்வே கோட்ட மேலாளர் விரைவில் உரிய நடவ டிக்கை எடுப்பதாக தெரிவித்தார்.

அரியலூர் மாவட்ட மகளிர் அணி சார்பில் ஆர்ப்பாட்டம்!

பானுமதி இராஜேந்திரன் – மீனா சாமிநாதன் – அ.ரியா பங்கேற்பு!

அரியலூர்,நவ, 3–

அரியலூர் மாவட்ட மகளிர் அணி சார்பில் தவெக அரசின் சட டம் ஒழுங்கு சீர்கேடு,பெண்கள் குழந்தைகள் பாதுகாப்பின்மை மற் றும் விலைவாசி உயர்வை கண் டித்து அரியலூர் மாவட்ட கழக செய லாளர், முன்னாள் அமைச்சர் சா.சி. சிவசங்கர் வழிகாட்டுதலின்படி அரி யலூரில் பேரறிஞர் அண்ணா சிலை அருகே மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் பானுமதி இராஜேந் திரன் தலைமையில் நடைபெற்றது. முன்னதாக மாவட்ட மகளிர் தொண் டரணி அமைப்பாளர் மீனாசாமி நாதன் அனைவரையும் வரவேற் றார்.

முன்னாள் ஒன்றிய குழு தலை வர் சுமதி அசோக சக்கரவர்த்தி அரி யலூர் நகர் மன்ற தலைவர் சாந்தி கலைவாணன், முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் கீதா ஜெயவேல், பேரூராட்சித் தலைவர் மார்க்கெட் அல்போன்ஸ், மாவட்ட மகளிர் அணி தலைவர் விஜயலட்சுமி, மாவட்ட துணை தலைவர் ராணி, சந்திரசேகர் மாவட்ட மகளிர் அணை துணை அமைப்பாளர் பர்வதவர்த்தினி, மாவட்ட மகளிர் துணை அமைப்பா ளர் அருணா மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் காந்திமதி, கனக சுப்புலட்சுமி, தென்னரசி, மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் சி. ராணி , அ.எழில ரசி மு .சித்ரா பெனிட்டா இவாஞ்ச லின், மல்லிகை சுந்தரம், ஆகி யோர் முன்னிலை வகித்தனர்

இந்த ஆர்ப்பாட்டத்தில் மாநில மகளிர் அணி சமூக வலைதள பொறுப்பாளர் அ.ரியா கலந்து கொண்டு கண்டன உரையாற்றி னார்.

நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கழக சட்டத்திட்ட திருத்தகுழு இணை செயலாளர் சுபா.சந்திரசே கர், முன்னாள் சட்டமன்ற உறுப்பி னர் அமரமூர்த்தி, மாவட்ட துணை செயலாளர்கள் மு.கணேசன், சி. சந்திரசேகரன், லதாபாலு,

மாவட்ட பொருளாளர் கு ராஜேந் திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் இரா.பாலு, வி.எம்.ஷாஜகான், சுமதி கருணாநிதி, ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் இரா.கென்னடி, பூ.செல்வராஜ், இரா.மணிமாறன், மா.அன்பழகன், கோ.அறிவழகன், ஆர்.கலியபெருமாள், வி.எழில்மா றன், ப. தனவேல், தெய்வ. இளை யராஜா, கே. ஜி. எஸ். முருகன், நா. கணேசன், இரா. அண்ணாதுரை, ஆர்.செந்தில்குமார், பொன்.செல் வம், வீர.சிவா நகரக் கழக செயலா ளர் இரா. முருகேசன் பேரூர் கழக செயலாளர்கள் கோபாலகிருஷ் ணன், அல்போன்ஸ், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் எஸ். ஆர்.இராமராஜன், க. தர்ம துரை, வை முருகானந்தம், கருப்பு சாமி, மா. ஜெயக்குமார், அருண் ராஜா, குலோத்துங்கன், வின் செண்ட் ராஜா,பி.வி. அன்பழகன் மற்றும் மாநில,மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர்கழக நிர்வாகிகள், மக ளிர் அணி நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டனர்.

இறுதியாக மாவட்ட மகளிர் தொண்டர் அணி துணை அமைப் பாளர் மலர்விழி ரஞ்சித் குமார் நன்றி கூறினார்.

ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்ட முன்னாள்

அவைத்தலைவர் மிசா. அ.அப்துல்சமது மறைவு!

கழக நிர்வாகிகள் நேரில் அஞ்சலி!

தஞ்சை நவ.3. பட்டுக்கோட்டை ஆணை விழுந்தான் குளத் தெரு அபூபக்கர் அவர்க ளின் மகனும், ஒருங்கி ணைந்த தஞ்சை மாவட்ட திமுக முன்னாள் அவைத்த லைவர் மிசா அ.அப்துல்ச மது (வயது 88) 01.11.2016 ஞாயிறு அன்று காலை மறைவெய்தினார் என் பதை அறிவிக்க வருந்துகி றோம்.

மறைந்த மிசா அப்துல் சமது ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்ட முன் னாள் தி.மு.க. அவை தலை வராகவும், பட்டுக் கோட்டை நகர வர்த்தக



சங்க பொதுச் செயலாள ராகவும், பி.சி.எம்.எஸ் தலைவராகவும், நகர்மன் றத் துணைத் தலைவராக வும் பொறுப்பு வகித்துள் ளார்.

அன்னாரின் மறைவு செய்தி அறிந்த தஞ்சை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், பொறுப்பா ளர் டி.பழனிவேலு, கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் எஸ்.எஸ். பழநிமாணிக்கம், தஞ்சை தெற்கு மாவட்டச் செயலா ளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, ச.முரசெலி எம். பி, கா.அண்ணாதுரை எம். எல்.ஏ, ந.அசோக்குமார் எம்.எல்.ஏ உள்ளிட்ட கழக நிர்வாகிகள் நேரில் அஞ் சலி செலுத்தினர்.

அன்னாரது இறுதி ஊர் வலம் நேற்று (02.11.2026) மாலை 4.00 மணி அளவில் பட்டுக்கோட்டையில் நடைபெற்றது.



விளாத்திகுளம் அரசு மருத்துவமனையில் ரூ.5கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் கட்டிட பணிகளின் இறுதி கட்டப் பணியினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்,ஜீ. வி. மார்க்கண்டேயன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.மேலும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை குறித்தும், மருத்துவமனை சுகாதாரம் குறித்தும் ஆலோசனை வழங்கினார்கள்.ஆய்வின்போது தலைமை மருத்துவர் சுரேஷ்குமார் ஒன்றிய செயலாளர்கள் அன்புராஜன், இமானுவேல் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

வளவனூர் எ. கிருஷ்ணமூர்த்தி

நவம்பர் 3 (2012)



இளம் வயது முதலே கழகக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, தமது பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.

விழுப்புரம் வட்டக் கழகச் செயலாளராகவும் – பல ஆண்டுகள் வளவனூர் பேரூர்க் கழகச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

மொப்போர் தியாகியான இவர், 1953–ல் மும்முனைப் போராட்டம் முதல் விலைவாசி உயர்வு எதிர்ப்பு ஆர்ப்பாட்டம், இந்தி எதிர்ப்பு போராட்டம், ஈழத் தமிழர் ஆதரவு போராட்டம் என கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு ஏறக்குறைய 368 நாட்கள் சிறையில் இருந்தவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.